[1996 மார்ச் 1

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் இயங்கக் கூடிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் இன்று பல சங்க செயலாளர்கள் முறைகேடு செய்து 14 பேர்களை விலக்கியதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் நடந்த நிகழ்வுகளை - மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன் - பல கோடி ரூபாய் சொத்து இருந்ததையெல்லாம் அவர்கள் முறைகேடாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது சர்சார்ஜ் கேஸ் போட்டு இழந்திருக்கக் கூடிய அந்த நட்டத்தை உடனடியாக மீட்பதற்கும், பால் உற்பத்தியாளர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா அல்லது நீதி விசாரணைக்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்கு? நடவடிக்கை எடுத்ததற்காகவா நீதி விசாரணை?

மாண்புமிகு திரு.தே.ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

172—

கற்கள் கடத்தப்படுவதை தடுத்தல்

**78609—திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சங்ககிரிப் பகுதியில் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டு சேலத்திற்கு கடத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1996 மார்ச் 1]

(அ) ஆம்

(ஆ) சங்ககிரி பகுதியில் சாதாரண கற்களுக்கு குத்தகை உரிமம் எதுவும் வழங்கவில்லை. அனுமதியின்றி கடத்தப்படும் கனிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டு 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்கு முறை மற்றும் அபிவிருத்தி) சட்டத்தின் பிரிவு 21 மற்றும் 23-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 1-4-1995 முதல் 31-10-1995 முடிய கள்ளத்தனமாக சிறுகனிமங்களைக் கடத்தி சென்ற வகையில் 4 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, ரூ.42,150/- அபராதம் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. உரிய அனுமதி சீட்டு இல்லாமல் கற்களை எடுத்துச் செல்லும் வாகனங்களை வருவாய் துறை, காவல் துறை, மற்றும் புவியியல் சுரங்கத்துறை அலுவலர்கள் தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பகுதியிலே இருக்கிற லைம் ஸ்டோன், சுண்ணாம்புக்கற்கள் போன்ற இவற்றிற்கெல்லாம் சீனியர் ரேஜ் ஃபீ தரம் வாரியாக எவ்வளவு வசூலிக்கப்படுகிறது என்று நான் அறிய விரும்புகிறேன். அது மட்டும் இன்றி சங்ககிரி பகுதியிலே இருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்கள் கடத்தப்படுவதை தடுக்க தீவிர முயற்சி இன்னும் அதிகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளத்தனமாக கனிமங்கள் எடுத்துச் செல்லப்படுவதை தீவிரமாக கண்காணிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை, புவியியல் சுரங்கத் துறை அலுவலர்களுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏற்கெனவே உத்திரவுகள் பிறப்பித்திருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது சீனியர் ரேஜ் ஃபீ எவ்வளவு வசூல் செய்யப்படுகிறது என்று கேட்டார்கள். அதிலே பிளாக் கிரானைட் என்னும் கனிமத்திற்கு, அதாவது கருப்பு கற்களுக்கு ரூபாய் ஒரு கியூபிக் மீட்டருக்கு 2 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பிலே வசூல் செய்யப்படுகிறது. அது போல ரெட், பிங்க், கிரே, கிரீன், வொயிட் கிரானைட் கற்களுக்கு ஒரு கியூபிக் மீட்டருக்கு ரூபாய் ஆயிரம் வசூல் செய்யப்படுகிறது. அது மட்டும் அல்லாமல் ஏரியா அசெஸ்மென்ட் என்று ஒரு ஹெக்டேருக்கு ஒரு நாமினல் தொகை வசூல் செய்யப்படுகிறது.

[1996 மார்ச் 1

முற்பகல் 11-05

அதேபோல அனுமதி வழங்கப்பட்ட பிறகு 6 மாத காலத்திற்கு அது ஆப்பரேட் செய்யாமல் இருந்தால் கற்களை வெட்டியெடுக்காமல் இருந்தால் டெட்டிரிமெண்ட் என்று சொல்லி அதையும் அரசாங்கம் வசூல் செய்கிறது. அது மட்டும் அல்லாமல், ஜல்லி கற்களுக்கு, கருங்கல் கற்களுக்கு 1 கியூபிக் ஃபீட்டுக்கு ரூ. 5.50-ம், லேட்டரைட் என்று சொல்லப்படுகிற செம்மண்ணுக்கு ரூ. 2.75-ம், சாதாரண மணலுக்கு ரூ. 5-ம், சுண்ணாம்பு கற்களுக்கு ரூ. 11-ம் அரசின் சார்பிலே சீனியர் ரேஜ் ஃபீ என்கின்ற வகையில் வசூல் செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பகுதியிலே இருக்கிற இந்தியா சிமெண்ட்ஸ் கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தை 20 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அந்த சிமெண்ட் பேக்டரிக்கு மட்டுமே ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற சிறிய, சிறிய தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கு இது மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிற காரணத்தினால் ஏற்கெனவே ரிசர்வ் செய்யப்பட்டது போக மீதியுள்ள நிலங்களை மற்ற சிறிய தொழில் செய்பவர்களுக்கு அந்த நிபந்தனைகளைத் தளர்த்தி இப்போது உரிமம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அதிகப்படியான முதலீட்டில் சிமெண்ட் தொழிற்சாலைகளை தொடங்குகின்றபோது 100 ஆண்டுகளுக்கு அல்லது 200 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு வேண்டிய அந்த கனிம பொருள்களை சுண்ணாம்பு கற்கள் கிடைக்கக்கூடிய அளவிற்குத்தான் அவர்கள் அதனை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொல்லி அரசிடத்திலே உத்தரவு வாங்கியிருப்பார்கள். இருந்தாலும், அவர்களுடைய தேவைக்குப் போக இருப்பதை மற்ற சிறிய தொழில் அதிபர்களுக்கு சட்டத்திற்கு உட்பட்டு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பகுதியில் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டு, கனிமத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் அதிபர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய ராயல்டி தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாததால், அந்தந்த

ஒன்றியங்களுடைய முன்னேற்றம் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா? வரும் 31-3-96-க்குள் நிலுவையிலுள்ள ராயல்டி தொகையைப் பெற்றுத்தர அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் முற்றிலும் தொடர்பில்லை. அவர் அதைப்பற்றி குறிப்பிட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு புகார் செய்வார்களேயானால், அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து அந்த ராயல்டி தொகையை வசூல் செய்து அரசுக்கு செலுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிய உத்தரவு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 173, திரு.ஏ.கே.சி.சுந்தரவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

173—

தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்

**108030—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து, தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 7 வருவாய் வட்டங்கள் உள்ளன. அவற்றில் வேலூர், திருப்பத்தூர் ஆகிய வட்டங்களை தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாகவும், ஆற்காடு வட்டத்தை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாகவும் ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. எனவே, மேற்கண்ட வட்டங்களில் புதியதாக தொழில் பிரிவுகளை அமைப்பவர்களுக்கும் ஏற்கெனவே உள்ள தொழிற்சாலையை விரிவாக்கம் செய்வதற்கும், விற்பனை வரி சலுகை, மின் கட்டண சலுகை, மூதலீட்டு மானியம் போன்ற சலுகைகள் அளிக்கப்படும். அந்த மாவட்டத்திலுள்ள வாலாஜா, அரக்கோணம், குடியாத்தம், வாணியம்பாடி போன்ற இதர வட்டங்கள், ஒரு வட்டத்தை தொழில் துறையில்